DEPOSITION OF WITNESS
(Chapter XXIII code Criminal Procedure)
IN THE COURT OF : JUDICIAL MAGISTRATE NO1, COURT , NAGAPATTINAM

Calendar
Miscellaneous
Preliminary Register **CC 125/2023** **DCB காவல் நிலையம்**

Session
Deposition of witness for : PW- 1(LW-1 )

Name : தினகர் Village /Taluk :

Fathers Name Caste /Religion :

Solemnly affirmed in accordance with the provision of Act I of 1872, Chapter X of the day of 20**.12.2023**

(1 வது எதிரி ஆஜர். 2 வது எதிரி ஆஜர் இல்லை. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் )

முதல் விசாரணை

நான் தற்போது கோயம்புத்துார் உப்பிலிபாளையம் பெர்க்ஸ் பள்ளி ரோட்டில் குடியிருந்து முதியோர்களுக்கு வீடுகட்டி தரும் தொழில் மற்றும் சினிமா தியேட்டர் தொடர்பான தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரி அசோக்குமார் என்பவரை தெரியும். 2 வது எதிரி பாலாஜி என்பவரையும் தெரியும்.

கடந்த 2009 ம் ஆண்டு நாகப்பட்டினம் பப்ளிக் ஆபிஸ் ரோட்டில் அமைந்திருந்த ஸ்டார் என்ற பெயரில் இருந்த தியேட்டரை விலைக்கு வாங்கினேன். மேற்படி தியேட்டரை பெரிய செலவில் புதுப்பித்து குளிர்சாதன வசதியுடன் ஏற்படுத்தி, மேற்படி யதியேட்டருக்கு தேவி A/C DTS என்ற பெயரில் சிறிது நாட்கள் நான் நடத்தி வந்தேன். கடந்த 2016 ம் ஆண்டு குபேந்திரன் என்பவர் வசம் மேற்படி தியேட்டரை நான் லீசுக்கு கொடுத்தேன். 2 ஆண்டு மேற்படி குபேந்திரன் என்பவர் எனக்கு சொந்தமான தியேட்டரை குத்தகைக்கு எடுத்து நடத்தி வந்தபோது ஆஜர் எதிரி அசோக்குமார் என்பவர் மேற்படி தியேட்டரில் மேலாளராக பணியில் இருந்தார். மேற்படி குபேந்திரன் என்பவரது குத்தகை காலம் முடிவடைந்த பிறகு ஆஜர் எதிரி அசோக்குமார் மேற்படி தியேட்டரை குத்தகைக்கு பெற்றிட என்னிடம் விருப்பம் தெரிவித்தார். அதனை தொடர்ந்து மேற்படி தியேட்டரை ஆஜர் எதிரி அசோக்குமார் என்பவருக்கு 4 ஆண்டுகளுக்கு தின வாடகையாக ரூ. 3,600/- என நிர்ணயித்து குத்தகை உரிமம் அளித்தேன். மேற்படி குபேந்திரன் என்பவர் குத்தகை காலம் முடிவடைந்ததும் எனது சொந்த செலவில் மேற்கொண்டு தியேட்டரை புதுப்பித்து ஆஜர் எதிரி அசோக்குமார் என்,பவர் வசம் ஒப்படைத்திருந்தேன். ஆனால் ஆஜர் எதிரி அசோக்குமார் என்பவர் மேற்படி திடியேட்டருக்குரிய வாடகையை உரிய காலத்தில் அளிக்காமல் இருந்தார். மேற்படி தியேட்டர் தொழில் எனக்கு முதன்மை தொழிலாக அமைந்திருக்காத காரணத்தினால் நான் அதனை பெரியதாக கண்டுகொள்ளவில்லை. ஆனால் வாடகை தொகையை அளிக்காமல் ஆஜர்எதிரி அசோக்குமார் பல்வேறு காரணங்களை அவ்வப்போது தெரிவித்து கொண்டே இருப்பார்.

இந்நிலையில் கடந்த 2022 ம் ஆண்டில் மேற்படி தியேட்டரை விற்று விடலாம் என முடிவு செய்தேன். அதனை தெரிந்து கொண்ட ஆஜர் எதிரி அசோக்குமார் என்பவர் ஒரு போலியான குத்தகை ஆவணத்தினை

ஜோடித்து நாகப்பட்டின மாவட்ட நீதிமன்றத்தில் COS No:3/2022 என்ற வழக்கினை எனக்கு எதிராக தாக்கல் செய்திருந்தார். மேற்படி குத்தகை ஆவணத்தில் செப்டம்பர் 2018 மாதத்தில் தயார் செய்யப்பட்டது போன்றும், மேற்படி ஆவணத்தில் ஆஜர் எதிரி அசோக்குமார் என்பவர் எனது தியேட்டருக்காக ரூ.1 கோடி செலவு செய்தது போன்றும், மேற்படி தொகையினை ஆஜர் எதிரி அசோக்குமார் என்பவருக்கு நான் திரும்ப அளித்திட வேண்டியது போன்றும், போலியாக தயார் செய்யப்பட்டு ஆஜர் எதிரி அசோக்குமார் அவராகவே கையொப்பம் செய்து கொண்டு ஆவணத்தினை ஜோடித்துள்ளார்.

ஆஜர் எதிரி அசோக்குமார் என்பவர் தின வாடகை தொகையான ரூ.3,600/- என்பதற்குரிய மடங்கு தொகைகளை எனது வங்கி கணக்கில் செலுத்தியுள்ளமைக்குரிய வங்கி கணக்கு விபரங்களை போலிசார் விசாரணையில் நான் அளித்திருந்தேன். மேற்படி ஆஜர் எதிரி அசோக்குமார் என்பவர் போலியாக தயார் செய்திருந்த குத்தகை பத்திரத்தில் தின வாடகை என்பது ரூ.1000/- என்பது பொய்யாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி போலியான குத்தகை பத்திரத்தினை பொறுத்து என்னிடம் எவ்விதமான சங்கதிகளையும் ஆஜர் எதிரியானவர் தெரிவித்திருக்கவில்லை. மேற்படி போலியான குத்தகை பத்திரத்தில் கண்டிருந்த விபரங்களும் நீதிமன்ற வழக்கு விசாரணைக்காக வரும் வரையில் எனக்கு தெரியாது.

மேற்படி போலியான குத்தகை ஆவணத்தில் அவ்வப்போது 11 மாதங்களுக்கொருமுறை குத்தகை உரிமம் புதுப்பிக்கப்பட்டதாக மேற்குறிப்பு கண்டிருந்தது. மேற்படி மேற்குறிப்புகளில் நான் கையொப்பம் ஏதும் செய்து கொடுத்திருக்கவில்லை. இந்நிலையில் மேற்படி மேற்குறிப்பிகளில் நான் செய்திருந்த கடந்த 21.05.2022 தேதியன்று குத்தகையானது புதுப்பிக்கப்பட்டதாக மேற்குறிப்பு ஒன்று கண்டிருந்தது. ஆனால் மேற்படி 21.05.2022 தேதியன்று நான் எனது குடும்பத்தாருடன் சிங்கப்பூருக்கு சென்றிருந்தேன். நான் சிங்கப்பூர் சென்றிருந்ததமைக்கு எனது கடவுச்சீட்டில் உரிய பதிவுகள் உரிய அதிகாரிகளால் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி குத்தகை ஆவணத்திலுள்ள கையொப்பம் என்னுடையது அல்ல என நிருபணம் செய்திட போலிசார் என்னுடைய மாதிரி கையொப்பத்தினையும் பெற்று தடயவியல் துறைக்கு அனுப்பி வைத்தார்கள். மேற்படி தடயவியல் ஆய்வில் மேற்படி குத்தகை ஆவணத்தில் கண்டிருந்த கையொப்பமானது என்னுடையதல்ல என அறிக்கை பெற்றதாக தெரிந்து கொண்டேன். மேற்படி எதிரியின் செய்கையின் வாயிலாக மிகுந்த மனஉளைச்சல் ஏற்பட்டது. அதன் காரணமாக இவ்வழக்கின் புகார் மனுவினை நாகப்பட்டின மாவட்ட குற்றப்பிரிவு காவல் நிலையத்தில் அளித்திருந்தேன். மாவட்டகுற்றப்பிரிவு காவல்நிலையத்தில் ஆஜர் எதிரி அசோக்குமார் என்பவரது மேலாளரான பாலாஜி என்பவருக்கு எதிராகவும், புகார் அளித்திருந்தேன். ஏனெனில் மேற்படி போலியான குத்தகை ஆவணத்தினை மேற்படி எதிரி பாலாஜி என்பவர் எழுதி சாட்சி கையொப்பம் செய்து ஆஜர் எதிரிக்கு உடந்தையாக செயல்பட்டுள்ளார். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். மேற்படி புகார் மனுவினை தான் காவல் நிலையத்தில் அளித்திருந்தேன். (**மேற்படி புகார் மனு அ.சா.ஆ.1 என குறியீடு செய்யப்படுகிறது.**)

இதுதொடர்பாக மாவட்ட குற்றப்பிரிவு போலிசார் என்னை விசாரித்தார்கள். ஆஜர் எதிரி தாக்கல் செய்திருந்த COS No:3/2022 என்ற வழக்கினை எதிர்த்து நான் சென்னை உயர்நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்திருந்த மனுவானது அனுமதிக்கப்பட்டு மேற்படி சென்னை உயர்நீதிமன்ற உத்தரவானது மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தால் உறுதி செய்யப்பட்டுள்ளது. (**மேற்படி சென்னை உயர்நீதிமன்றம் CMA No:2716 to 2719 of 2022 என்ற மனுவில் கடந்த 17.04.2023 தேதியிட்ட உத்தரவானது அ.சா.,2 என குறியீடு செய்யப்படுகிறது.**)

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போதிய வாய்ப்பளிக்கப்பட்டும் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது.